OS.No. 54/2020

Date : 27.10.2025

Witness Name & Rank – விஜயக்குமார் - PW2

சாட்சி அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. நான் TIme Process Mills என்ற நிறுவனத்தில் பணி புரிந்ததை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் மேற்படி நிறுவனத்தின் பணியாற்றியதாக சொல்லி உள்ள நிலையில் பணியிலிருந்து நிறுத்திய பிறகு எப்போது எனது முதலாளியை நான் எப்போது பார்த்தேன் 2022ல் பார்த்தேன்.நான் 2022—ல் முதலாளியை பார்த்தவுடன் நான் பழைய விலாசத்தில் இல்லை புதிய விலாசத்தை மாற்றி கொடுத்து விட்டேனா என்றால் கொடுத்துவிட்டேன். நான் KS பைனான்ஸ் நிறுவனத்தில் விஜயகுமார் மற்றும் சுப்பிரமணி ஆகியோரை தான் பார்த்தேன் வேறு யாரையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். வேறு எந்த நபர்களும் அந்த பைனான்ஸ் நிறுவனத்தில் பணியிலும் இல்லை எனக்கு யாரையும் தெரியாது என்றால் சரிதான்
2. எங்களது நிறுவனத்திற்காக வாங்கப்பட்ட கடன் தொடர்பாக நான் கணக்கு வழக்குகளை பராமரித்து வந்தேன் என்றால் சரிதான். அதேபோல் மாதாந்திர தவணையாக நான் வட்டி செலுத்தி வந்ததாக சொல்லி உள்ள நிலையில் அதையும் நாங்கள் பராமரித்து வந்தோம் என்றால் சரிதான். ஒன்றாவது பிரதிவாதி விஜயகுமாருக்கு பொது அதிகாரம் எழுதிக் கொடுத்தது தொடர்பாக நேரடியாக எனக்கு ஏதாவது தெரியுமா என்றால் எனது முதலாளி சொல்லித்தான் தெரியும், நேரடியாக தெரியாது. 2009 காலத்தில் பார்ட்டிகளுக்குள் என்ன பேசிக்கொள்ளப்பட்டது எவ்வாறு பொது அதிகாரம் பத்திரம் எழுதப்பட்டது என்று நேரடியாக தெரியாது என்றால் இல்லை, தெரியும். நான் சார்பதிவாளர் அலுவலகம் சென்றேனா என்றால் இல்லை. பவர் எழுதப்பட்டதாக சொல்லப்படும் தினத்தில் பொது அதிகார பத்திரத்தை தவிர வேறு பத்திரங்கள் ஏதாவது எழுதப்பட்டதா என்றால் இல்லை. பொது அதிகார பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். சாட்சி கையொப்பம் செய்த நபர்களை தெரியுமா என்றால் தெரியும்.
3. நான் நிரந்தர பணியாளர் என்பதால் நான் பணியாற்றிய நிறுவனத்தில் இருந்து

கடிதம் கொடுத்து 2010 ஆம் ஆண்டு எனது விருப்பத்தின் வேறு நிறுவனத்தில் இருந்து விடுவித்துக் கொண்டேன் என்றால் சரிதான். நான் எதற்காக அந்த நிறுவனத்தில் இருந்து விடுவித்துக் கொண்டேன் என்றால் சம்பளம் குறைவாக இருந்ததால் விடுவித்துக்கொண்டேன். இந்த வழக்கு தொடர்பாக என்னை எப்போது வாதி சந்தித்து சாட்சியம் அளிக்க கேட்டுக் கொண்டார் என்றால் இந்த ஆண்டு ஏழாவது மாதம் கேட்டுக்கொண்டார். அதன் பிறகு நான் எப்போது அவருடன் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் அவர் கேட்டுக் கொண்டதிலிருந்து ஒரு வாரம் கழித்து வழக்கறிஞர் அலுவலகம் சென்றேன். அப்போது தட்டச்சு செய்யப்பட்டு நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வாதியும் உடன் இருந்தார் என்றால் சரிதான்.எனக்கும் இந்த வழக்கு சங்கதிகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை நான் எந்த ஒரு காலத்திலும் வாதியில் நிறுவனத்தில் பணியாற்றியதில்லை வாதி எனக்கு நன்கு தெரிந்தவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நீதிமன்ற சம்மனின் மூலம் சாட்சியம் அளித்துள்ளேன் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல நிராகரிக்கத்தக்கது என்றால் சரியல்ல

மேற்படி குறுக்கு விசாரணையை பிரதிவதிகள் 4 முதல் 6 தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

3ம் பிரதிவாதி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை சாட்சி நீதிமன்ற சம்மனின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளதால் மேற்குரிய சாட்சியம் முடித்து வைக்கப்படுகிறது.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(SD/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---